[திரு. கே.என். நேரு] [*2022 ஏப்ரல் 29*

குப்பையை மூடி, அதில் ஒரு குழாயைச் சொருகி, அதிலிருந்து மீத்தேன் வாயு எடுத்து, சிலிண்டரில் நிரப்பி விற்கக்கூடிய ஒரு நிலையைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

இந்தத் துறை என்பது, தொடர்ந்து இந்தப் பிரச்சினையை எப்படிச் சரிசெய்வது; சென்னை மட்டுமல்ல, அனைத்து நகரங்களிலும் இந்தப் பிரச்சினை இருக்கின்றது. நகரங்களில், பேரூராட்சிகளில் இடம் இல்லாத காரணத்தினால் குப்பைகள் கொட்டுவதற்காக நீண்டதூரம் தள்ளிப் போக வேண்டியிருக்கிறது. அந்தக் கிராமப் பகுதி மக்கள் அங்கு குப்பையைக் கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். எனவே, இப்போது நிலம் கையகப்படுத்த முடியாது என்ற காரணத்தினால், private*–ல் நிலம் வாங்கி, ஒவ்வோர் இடத்திலும் நிலம் கொடுத்து, அந்த இடத்திலேயே குப்பையைச் சேகரித்து, மறுசுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்ற பணிகள் அனைத்து பகுதிகளிலும் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, கொடுங்கையூர் மட்டுமல்ல, பெருங்குடி மட்டுமல்ல, இன்னும் இரண்டாண்டுக் காலத்தில் பெருங்குடிப் பகுதியில் இருக்கின்ற அனைத்து குப்பைகளும் சரி செய்யப்படுமளவுக்கு அங்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதை உதாரணமாக வைத்து மற்ற நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஈ) திருப்பரங்குன்றம் முருகன் கோயில், வாகன நிறுத்துமிடம் அமைத்தல், தங்கும் விடுதிகளை நவீனப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள், என்னவென்று சொல்லுங்கள். நீங்கள், விதி 55–ன்கீழ் ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். சுருக்கமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவாருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொன்னதால், நீங்கள் ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.*

முற்பகல் 11–35

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு*

2022 ஏப்ரல் 29] [திரு. வி.வி. ராஜன் செல்லப்பா]

நான் சார்ந்திருக்கின்ற திருப்பரங்குன்றம் கோயிலுக்கான சிற்சில அடிப்படைத் தேவைகளைக் குறிப்பிட்டு, விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்திருந்தேன். திருப்பரங்குன்றம் முருகன் கோயில் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார். பல்வேறு கவனத்தோடு அவர் பணியாற்றி வருகிறார். எங்களுடைய திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் சுபமுகூர்த்த நாட்களில் கிட்டத்தட்ட 250–க்கும் மேற்பட்ட திருமணங்கள் நடைபெறுகின்றன. அதனால், வாகன நெருக்கடி அதிகமாக இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு வருகிற பக்தர்கள் சுற்றுலா வாகனங்களைத் திருப்பரங்குன்றத்திலேதான் நிறுத்துகிறார்கள். ஐயப்பன் கோயிலுக்குச் செல்கிற பக்தர்களும் அவர்களுடைய வாகனங்களைத் திருப்பரங்குன்றத்திலேதான் நிறுத்துகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *ஒரேயொரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அதோடுமட்டுமல்லாமல், இரவு நேரத்தில் அங்கேதான் தங்குகிறார்கள். குறிப்பாக, பழனி, திருச்செந்தூர் போன்ற திருக்கோயில்களுக்கும், பொதுவாக அனைத்து திருக்கோயில்களிலும் சொந்தமாக வாகன நிறுத்துமிடங்கள் இருக்கின்றன. ஆனால், திருப்பரங்குன்றத்தில் திருக்கோயிலுக்கென்று வாகன நிறுத்துமிடம் இல்லாத காரணத்தால், வாகனங்கள் அனைத்தும் திருநெல்வேலி நெடுஞ்சாலையில் நிறுத்தப்படுகின்றன; கல்லூரிக்குப் போகும் வழியில் நிறுத்தப்படுகின்றன; பெரிய ரத வீதியில், சென்னை போகும் வழியில் நிறுத்தப்படுகின்றன. ஆகவே, உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோயிலுக்கு வருபவர்கள் வாகனங்களை நிறுத்துவதற்கும், பல ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டு, சிதலமடைந்திருக்கிற தங்கும் விடுதியைப் புதுப்பித்து, நவீனப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, குறிப்பாக, இந்தக் காலக்கட்டத்தில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஈர்த்துவிட்டீர்கள்.*

[2022 ஏப்ரல் 29

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். வாகன விபத்துகள், தீ விபத்துகள், கட்டட இடிபாடு விபத்துகள் போன்றவை தொடர் கதையாகிவிடாதவண்ணம், பாதுகாப்பு வசதியோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்பரங்குன்றம் திருக்கோயிலுக்கு நல்ல திட்டங்களை வழங்குவார் என்று அவருடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருகனின் அறுபடை வீடுகளில் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் முருகன் திருக்கோயிலுக்குப் பல்வேறு அடிப்படைத் தேவைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறினார். துறையினுடைய ஆய்விலே, திருப்பரங்குன்றம் திருக்கோயிலின் கும்பாபிஷேகம் 6–6–2011 அன்றுதான் நடைபெற்றிருக்கிறது. ஆகம விதிமுறைப்படி, குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்ற பின்தான் மீண்டும் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றாலும், இந்தப் பகுதியிலே ஏற்கெனவே இருக்கும் தை கார்த்திகை அறக்கட்டளையினர், அங்கே காலியாக இருக்கின்ற இடமும், திருக்குளமும் எங்களுக்குச் சொந்தம் என்று 1991 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு வழக்குகளைத் தொடுத்ததைத் தொடர்ந்து, சில சமயங்களில் திருக்கோயிலுக்குச் சாதகமாகவும், சில சமயங்களில் தை கார்த்திகை அறக்கட்டளையினருக்குச் சாதகமாகவும் வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கப்பட்டதால், 2016 ஆம் ஆண்டு முதல் மதுரை நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையிலே இருக்கின்றது. அந்த வழக்கைத் துரிதப்படுத்தி, முடித்து அந்த இடத்தை வாகன நிறுத்துமிடமாக பயன்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கின்றார். இந்தத் திருக்கோயிலைப் பொறுத்தவரையில், சுமார் 12 பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளச் சொல்லியிருக்கிறார். 10 ஆண்டுக் காலம் நீங்கள் செய்ய முடியாத பணிகளையும் செய்ய வேண்டி ஆணையிட்டிருக்கின்ற முதல்வர், எங்களுடைய தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தளபதியார் அவர்கள் அறிவுறுத்தியிருக்கின்ற இந்தப் பணிகள் அனைத்தும், இந்த ஆண்டின் மானியக் கோரிக்கையிலே

2022 ஏப்ரல் 29] [திரு. பி.கே. சேகர்பாபு]

இடம் பெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, பக்தர்கள் வருவதற்கும், தங்குவதற்கும் தேவையான அளவிற்கு வசதிகளும், தரிசனம் செய்வதற்கு அனைத்து வகையிலும் சிறப்பான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

தளி தொகுதி, யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளால் ஏற்படும் உயிர் மற்றும் பயிர் சேதங்களுக்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள் இருக்கையில் இல்லை.*

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ட்டி. இராமச்சந்திரன் மற்றும் திரு. K. மாரிமுத்து ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளால் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதில் இருப்பதை அப்படியே படித்துவிடுங்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளால் ஏற்படும் உயிர் மற்றும் பயிர் சேதங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*